DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI

Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.

Judicial Magistrate, Manapparai

Date: 06.10.2025

CC.No. 100/2025

சாட்சி : PW1

| | |
|---|---|
| பெயர் : திரு. பொன்னுச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சங்கப்பிள்ளை | தொழில் : கூலி |
| கிராமம் : அம்மாப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 64 /2025 |

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317– ன் படி மனுதாக்கல், வழக்கறிஞர் ஆஜர் )

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எதிரிகள் ஆஜர் இல்லை. கடந்த 06.01.2021 அன்று எனது மருமகன் சுந்தரப்பாண்டி எனது மகளின் நடவடிக்கை சரியில்லை என்று சொல்லி அவரை வந்து கூட்டிச்செல்ல என்னிடம் போனில் சொன்னார். நான் உடனே நேரடியாக குளுந்தாம்பட்டியில் உள்ள எனது மருமகன் வீட்டிற்கு சென்றேன். அப்போது எனது மருமகன் எனது இடத்திற்குள் கால் வைக்ககூடாதடா என்று சொல்லி ஏண்டா உனது மகளை கூட்டிவிட்டு வாங்கிதிங்கிறாய் என்று சொல்லி என்னை நெஞ்சில் எட்டி மிதித்துவிட்டார். நான் கீழேவிழுந்துவிட்டேன். பின்னர் நான் வீட்டிற்கு சென்றேன். எதிரி என்னை உதைத்தால் உயிரோடு இருக்க வேண்டாம் என்று பாலிடாயில் குடித்துவிட்டேன். என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் திருச்சி அரசு மருத்துவமனையில் 3 நாள்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினேன்.

2. 10.01.2021 அன்று மாலை எனது மகன் தவசி எதனால் மருந்து குடித்தீர்கள் என்று கேட்டார். நான் நடந்ததை சொன்னேன். அந்த சமயத்தில் எனது மைத்துனர் கருப்பையா என்னை பார்ப்பதற்காக வந்திருந்தார். எனது மகன் கருப்பையாவை அழைத்து கொண்டு என்னவென்று கேட்பதற்காக எனது மருமகன் வீட்டிற்கு சென்றார்கள். அவர்களை கெட்ட வார்த்தைகளால் தரக்குறைவாக பேசி அடிக்க முயன்றதால் அவர்கள் இருவரும் வீட்டிற்கு

வந்துவிட்டார்கள். பின்னர் எதிரியின் அம்மா பாக்கியத்தோடு காமேஸ், லோகநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து முகம் தெரியாது 4, 5 நபர்களை காரில் அழைத்து கொண்டு 11.01.2021 அன்று விடியற்காலை 03.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து காமேஸ்குமாரும், லோகநாதனும் கட்டையால் எனது மகனை வீட்டிலிருந்து ரோட்டிற்கு இழுத்து வந்து அடித்தார்கள். அதன்பின்பு எதிரி பாக்கியம் அப்பனையும், மகனையும் கொன்றுவிட்டு வாங்கடா என்று காமேஸ்குமாரிடம் சொல்லவும் காமேஸ்குமாரின் கையில் இருந்த கட்டையை லோகநாதன் பிடிங்கிகொண்டு வந்து என்னை தலையிலும், வலது தோள்பட்டையிலும் அடித்து காயம் ஏற்படுத்தினார். அந்த சமயத்தில் எனது மைத்துனர் கருப்பையா துாங்கிகொண்டிருந்தார். எங்களை அடிப்பது பார்த்து எனது மனைவி வெள்ளையம்மாள் கருப்பையாவிடம் சொல்லி எங்களை அடிக்கிறார்கள் என்று சொல்லி கூட்டி வந்தார். பின்னர் எதிரிகள் சென்றுவிட்டார்கள்.

3. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தோம். நான் சுமார் 8, 9 நாள்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். எழுதிய பின்னர் வாசித்து காட்டினார்கள். பின்னர் நானும், எனது மகனும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 06.10.2025 | |
| CC.No. 100/2025 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திருமதி. வெள்ளையம்மாள் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பொன்னுச்சாமி | தொழில் : கூலி |
| கிராமம் : அம்மாப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 60 /2025 |
| ( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317– ன் படி மனுதாக்கல், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரிகளை தெரியும், பாக்கியம் எனது சம்பந்தி. மற்ற எதிரிகள் இருவரும் அவரது மகன்கள். எதிரிகள் ஆஜர் இல்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு எனது மருமகன் சுந்தரப்பாண்டி எனது மகளின் நடவடிக்கை சரியில்லை என்று சொல்லி அவரை வந்து கூட்டிச்செல்ல எனது கணவரிடம் போனில் சொன்னார். எனது கணவர் உடனே நேரடியாக குளுந்தாம்பட்டியில் உள்ள எனது மருமகன் வீட்டிற்கு சென்றார். அப்போது எனது மருமகன் எனது இடத்திற்குள் கால் வைக்ககூடாதடா என்று சொல்லிஏண்டா உனது மகளை கூட்டிவிட்டு வாங்கிதிங்கிறாய் என்று சொல்லி எனது கணவரின் நெஞ்சில் எட்டி மிதித்துவிட்டார். அதனால் எனது கணவர் அவமானம் தாங்காமல் மருந்து குடித்துவிட்டார். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் திருச்சி அரசு மருத்துவமனையில் 3 நாள்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

2. சிகிச்சைபெற்று வீடு வந்த மறுநாள் மாலை எனது மகன் தவசி எதனால் மருந்து குடித்தீர்கள் என்று கேட்டதற்கு எனது கணவர் தனது மருமகன் எட்டி உதைத்தால் மருந்தை குடித்துவிட்டதாக சொன்னார். அந்த சமயத்தில் எனது தம்பி கருப்பையா எனது கணவரை பார்ப்பதற்காக வந்திருந்தார். எனது மகன் கருப்பையாவை அழைத்து கொண்டு என்னவென்று கேட்பதற்காக எனது மருமகன் வீட்டிற்கு சென்றார்கள்.

அவர்களை கெட்ட வார்த்தைகளால் தரக்குறைவாக பேசி அடிக்க முயன்றதால் அவர்கள் இருவரும் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

3. பின்னர் அன்று இரவு 03.00 மணியளவில் எதிரியின் அம்மா பாக்கியத்தோடு காமேஸ், லோகநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து முகம் தெரியாது 2, 3 நபர்களை காரில் அழைத்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து எனது கணவரையும், மகனையும் கட்டை கொண்டு காமேஸ், லோகநாதன் சேர்ந்து அடித்தார்கள். ( சாட்சி சாட்சியம் அளிக்கும் போது கண்ணீர் மல்கியும், பயத்துடனும் சாட்சியம் அளித்தார்) அதில் எனது கணவருக்கு தலையிலும், முதுகிலும், வலது தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு வலது தோள்பட்டையிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. எனது தம்பி கருப்பையா அவர்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள். இன்று வரை பயத்துடனே வாழ்ந்து வருகிறோம். எந்த கார் வந்தாலும் பயந்து கொண்டு எதிரிகள் தான் வருகிறார்கள் என்று வெளியே வந்து பார்த்து கொண்டிருக்கிறோம். எதிரிகள் காமேஸ், லோகநாதன் ஆகிய இருவரும் இந்த வழக்கை வாபஸ் வாங்கவிட்டால் கொன்றுவிடுவோம் என்று கத்தியை கொண்டு வந்து மிரட்டுகிறார்கள். அதனால் பயந்து கொண்டு வாழ்கிறோம். ( சாட்சியானவர் அழுது கொண்டே சாட்சியம் அளிக்கிறார்).

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,

Judicial Magistrate,
Manapparai.